## திருநெல்வேலி மாநகராட்சி

**2020ம் ஆண்டு மே மாதம் 29ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்**

1) திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட வார்டுஎண். 18, வி.எம்.சத்திரம் பகுதியில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகனமேடையை பராமரிக்கும் பணியை மேற்கொள்ள விருப்பமுள்ளவர்கள் மனுசெய்யத் தெரிவித்து பத்திரிக்கைகளில் EOI விளம்பரம் செய்யப்பட்டதை தொடர்ந்து விருப்ப மனுக்கள் வரப்பெற்றன. 29.05.2020ம் தேதி முற்பகல் 11.30 மணிக்கு எரிவாயு தகனமேடை டபராமரிப்பு பணியை மேற்கொள்ள தன்னார்வ தொண்டு நிறுவனம் தேர்வு செய்தல் தொடர்பாகஆய்வுக் கூட்டம் மாநகரநலஅலுவலர் தலைமையில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தின் விபரங்கள் பின்வருமாறு,

| வ.எண். | அறக்கட்டளை/தொண்டு நிறுவனங்கள் பெயர் | தகுதி |
|---|---|---|
| 1. | தாய் இல்லம் அறக்கட்டளை | 1. எரிவாயு தகனமேடையில் பணிசெய்த அனுபவம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>2. மாநகராட்சி சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி அளிக்கப்பட்டுள்ளது.<br>3. குறைந்த கட்டணத்தில் ஆம்புலன்ஸ் சேவை செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 2. | Rotary club of TirunelveliStar | 1. தகனமேடைபராமரிப்புபணிதொடர்பாக அனுபவம் இல்லை.<br>2. ரோட்டரிகிளப் வாயிலாக மக்களுக்கு பல்வேறு உதவிகள் செய்யப்பட்டுள்ள விபரம் இணைக்கப்பட்டுளள்து.<br>3. ரோட்டரி கிளப் உறுப்பினர்கள் மற்றும் CSR fund மூலமாகவும் எரிவாயு தகனமேடை பராமரிக்கும் பணியை சிறப்புற செய்வோம் என உறுதியளித்துள்ளனர். மேலும் திலி மருத்துவக் கல்லூரியிலிருந்து வரும் ஆதரவற்றோர் சடலங்களை இலவசமாக எரியூட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 3. | J.P. Charitable Trust | 1. தகனமேடை பராமரிப்பு பணி தொடர்பாக அனுபவம் இல்லை.<br>2. 35 ஆண்டுகளாக J.P.ஆம்புலன்ஸ் மூலமாக மக்களுக்கு பொது சேவை செய்து வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>3. உறவினர்களால் கைவிடப்பட்ட இறந்தவர்களின் உடலை நல்லமுறையில் நல்லடக்கம் செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |

எனவே மேற்கண்ட விபரங்களின் அடிப்படையில் ,பாளையங்கோட்டை மண்டல அலுவலகத்திற்குட்பட்ட நவீனஎரிவாயு தகன மேடையில் எரியூட்டப்படும் சடலங்களுக்கு மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் கட்டணம் வசூல் செய்து பராமரிப்பு பணிமேற்கொள்ளதாய் அறக்கட்டளைக்கு அனுபவம் இருப்பினும், Rotary Club of TirunelveliStar CSR-ன்படி செயல்படுவதாக தெரிவித்துள்ளதாலும், 2018 மற்றும் 2019ம் ஆண்டுகளில் Rotary Club of Tirunelveli Star மூலம் செய்யப்பட்டுள்ள உதவிகள் திருப்திகரமாக உள்ளதாலும் மாநகராட்சியின் நிபந்தனைகளுக்குட்பட்டு நவீன எரிவாயு தகனமேடை பராமரிப்பு மற்றும் செயலாக்க பணியினை வழங்கலாம் எனஆய்வுக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. ஆய்வுக் கூட்டநடவடிக்கைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் ,முடிவுக்கும்

அலுவலகக்குறிப்பு :

மேற்கண்ட ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்களின் பரிந்துரையின்படி, பாளையங்கோட்டை மண்டல அலுவலகத்திற்குட்பட்ட வார்டுஎண் 18, வி. எம். சத்திரம் பகுதியில் உள்ள நவீன எரிவாயு தகனமேடை மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் கட்டணம் வசூல் செய்து பராமரிப்பு பணிமேற்கொள்ள தாய் அறக்கட்டளைக்கு அனுபவம் இருப்பினும், Rotary Club of Tirunelveli Star CSR-ன்படி செயல்படுவதாக தெரிவித்துள்ளதாலும், 2018 மற்றும் 2019ம் ஆண்டுகளில் Rotary Club of Tirunelveli star மூலம் செய்யப்பட்டுள்ள உதவிகள் திருப்திகரமாக உள்ளதாலும் மாநகராட்சியின் நிபந்தனைகளுக்குட்பட்டு நவீன எரிவாயு தகனமேடை பராமரிப்பு மற்றும் செயலாக்க பணியினை வழங்கலாம் என்ற ஆய்வுக் கூட்ட முடிவை பரிசீலித்து முடிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 51

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

(TP2/8430/19-பாளை)

---